Oatley Vigmond

ONTARIO'S PERSONAL INJURY LAW FIRM



# உங்கள் எதிர்காலம் எங்கள் குறிக்கோள்

# நாங்கள் தனிநபர் காயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கிறோம்.

உங்களுக்கோ உங்களுக்குப் பிரியமானவருக்கோ கடுமையாகக் காயம் ஏற்பட்டால், அது அப்படியே தலைகீழாக மாற்றிவிடக்கூடும் என உங்களுக்குத் தெரிந்திருக்கும். எல்லா குழப்பத்துக்கும் அழுத்தத்துக்கும் இடையில், அதை நிபுணத்துவத்தோடும் கரிசனையோடும் வழிநடத்திச் செல்வதற்கு பழக்கப்பட்ட, நீங்கள் எதிர்கொள்ளும் எதிர்காலத்தைப் புரிந்துகொள்ளக்கூடிய வலிமையான வழக்குரைஞர் உங்களோடு பயணிப்பது மிகவும் முக்கியமான கூறுகளில் ஒன்றாகும்.

தனிநபர் காயங்கள் சட்டத்தில் 40 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடனும், வெற்றிகள் நிரூபிக்கப்பட்ட வரலாற்றோடும், மறுவாழ்வு, பராமரிப்பு மற்றும் வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நல்வாழ்வுக்கும் தேவையான ஈடுஇணையற்ற புரிந்துகொள்தலை ஒட்லி விக்மாண்ட் கொண்டிருக்கிறது. சூழ்நிலைகள் காரணமாக உங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு தேவையான நிதிசார்ந்த பாதுகாப்பை மீட்டெடுப்பது எங்களுடைய பொறுப்பாகும். மோட்டார் வாகன விபத்துகள், கார் விபத்துகள், சறுக்குதல் மற்றும் விழுந்த விபத்துகள், கேடான மரணம், தயாரிப்புக் கடமை, விபத்துப் பயன்கள் மற்றும் மருத்துவத்தில் கோளாறு, நீச்சல் மற்றும் தாவும் சாகசங்களால் ஏற்படும் விபத்துகள் உள்ளிட்ட அனைத்து வகையான தனிநபர் காயச் சட்டத்தில் எங்களுக்கு அனுபவம் உள்ளது.

ஒட்டுமொத்த சட்ட நடைமுறையின் மூலம் முக்கியமான முதல்நிலை சந்திப்புகள் முதல், தீர்வு ஏற்படும் வரை எந்த செலவும் இல்லாமல் உதவுவதற்கு நாங்கள் இருக்கிறோம். உங்கள் தீர்வு எட்டப்பட்டதும், உங்கள் நீண்ட-கால நிதி மற்றும் தனிநபர் எதிர்காலத்துக்கு புத்திசாலித்தனமாகத் திட்டமிடுவதற்கு உங்களுக்கு உதவுவோம். அது தான் எங்களுடைய வாக்குறுதி.



# நாங்கள் எவ்வாறு வேறுபடுகிறோம்

### நாங்கள் எப்போதும் நாணயமாகச் செயல்படுகிறோம்

எங்கள் வாடிக்கையாளர்களுக்கு கருணையோடு பாதாடுவதால் சட்டம், மருத்துவம் மற்றும் காப்பீட்டு சமூகங்களில் நாங்கள் பிரபலமாகவும் மதிப்புமிக்கவர்களாகவும் இருக்கிறோம். உங்கள் தேவைகள் எல்லாவற்றுக்கும் முதலானவையாக இருக்கின்றன, உங்களது சிறந்த நிதிசார்ந்த, உடல்சார்ந்த மற்றும் மனநல ஆரோக்கியத்தைப் பாதுகாக்க எங்கள் திறமை, ஆற்றல் மற்றும் அனுபவத்தை நாங்கள் எப்போதும் உபயோகிப்பதால் நீங்கள் நம்பிக்கையாக உணரலாம்.

### தனிநபர் காயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கிறோம்

காப்பீட்டு நிறுவனங்களுக்கு நாங்கள் வழக்காடுவதில்லை. 40 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட தனிநபர் காய அனுபத்துடன், முதுகுத்தண்டு காயங்கள், கடுமையான மூளைக் காயங்கள் மற்றும் கடுமையான மூட்டுசார்ந்த காயங்கள் உள்ளிட்ட எல்லா வகையான பெருங்கேடுதருகின்ற காயங்களுக்கும் நாங்கள் தனிநபர்களுக்காக வெற்றிகரமாக வாதாடி இருக்கிறோம்.

### குழு-சார்ந்த அணுகுமுறையை வழங்குகிறோம்

உங்கள் மறுவாழ்வு, பராமரிப்பு மற்றும் உங்கள் குடும்ப நல்வாழ்வுக்கு என்று பிரத்யேகமாக செயல்படும் சமூக உடல்நலப்பராமரிப்புக் குழுவை உருவாக்குவதில் எங்கள் திறமையான விபத்து நலன்கள் நிபுணர்கள் சிறப்பான பணியை செய்கிறார்கள். சமூகத்தில் உடல்நலப் பராமரிப்பு வழங்குநர்களுக்கு அடுத்தபடியாக உதவும் நெட்வொர்க்கை உருவக்குவதில், உங்களுக்கு சிறந்த சட்டப்படியான வழக்குரைஞராக இருப்பதோடு மட்டுமல்லாமல் உங்கள் சிகிச்சை மற்றும் நீண்ட-கால நல்வாழ்வுக்கு அர்ப்பணித்துள்ள சிறந்த உடல்நலப் பராமரிப்புக் குழுவையும் வழங்க உறுதியளிக்கிறோம்.

### சமூகத்தில் நாங்கள் மதிப்புமிக்கவர்களாக இருக்கிறோம்

காப்பீட்டுதாரர்கள் எங்கள் பெயரை மதிப்பதால் உங்களுக்குக் கிடைக்கவேண்டியதை உங்களுக்கு தீர்வாக்கித் தருவோம். எங்கள் தனிநபர் காய வழக்குரைஞர்கள் கடுமையான வழக்குகளுக்காக நீதிமன்றம் சென்று வெற்றிபெறுவதில் 40 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்கள். எங்களது பல வழக்கறிஞர்கள் சான்றிதழ் பெற்ற வழக்காடும் நிபுணர்களாவார்கள், அவர்கள் நீதித்துறையின் எல்லா கட்டங்களிலும் எங்கள் வாடிக்கையாளர்களுக்காக வாதாடத் தயார்ப்படுத்தப்பட்டுள்ளார்கள். உங்கள் பக்கத்தில் வாதாட நன்கு பிரபலமான மதிக்கத்தக்க வழக்குரைஞர் இருப்பது உங்கள் எதிர்காலத்துக்கு முக்கியமானதாகும்.

> “எனது விபத்திற்குப் பின் எனக்கு நடந்த ஒரு நல்ல விஷயம் ஓட்லி விக்மாண்ட் தான். வழக்கறிஞர்' என்கிற சொல்லைக் கேட்டதும் அச்சமடைந்தேன்.
> எனினும், எனது குழுவினர் என்னை இன்னொரு வழக்காகப் பார்க்காமல், நபராக நடத்தினார்கள். நான் அவர்களுக்கு ஒரு முக்கியமான வாடிக்கையாளர் என்பதை உணரச்செய்தார்கள்.”

**ரேண்டி அட்கின்சன்**
தொடர்ச்சியான மூட்டுக் காயங்கள் மற்றும் இடது தோளில் முடக்குவாதம்

எங்கள் வாடிக்கையாளரின் வெற்றிக் கதைகளைப் பற்றி *oatleyvigmond.com/testimonials* பக்கத்தில் ஆன்லைனில் அறிந்துகொள்ளவும்.



## உங்களுக்கு தனிநபர் காயத்துக்கான வழக்கறிஞர் ஏன் தேவை?

அனுபவமிக்க தனிநபர் காய வழக்கறிஞர் உங்களுக்கு ஏன் தேவை என்பதற்கான பல்வேறு காரணங்கள் உள்ளன. முதலாவதாக, தனிநபர் காய வழக்குகள் சிக்கலானவை, ஒவ்வொரு வழக்கும் தனித்துவமானவை. காயங்கள் பெருங்கேடுதருகின்றவையாக வாழ்க்கையையே-மாற்றிப் போடக்கூடியவையாக இருக்கும் வழக்குகளில், உங்கள் காயங்களின் நீண்ட காலப் பிரச்சனைகளை உண்மையாக உணர்ந்துகொள்ளும் வழக்கறிஞர் உங்களுக்குத் தேவை. இரண்டாவதாக, நாங்கள் தனிநபர் காய வழக்காடுதலை மட்டும் புரிந்துகொள்ளாமல், உங்கள் மறுவாழ்வு மற்றும் மருத்துவத் தேவைகளுக்கு வழிநடத்திச் செல்வதற்கு உதவக்கூடிய நபர்களையும் அனுபவத்தையும் கொண்டிருக்கிறோம். இறுதியாக, போராட்டம் இல்லாமல் வழங்கவேண்டிய இழப்பீடை காப்பீட்டு நிறுவனங்கள் செய்வதில்லை. துவக்கம் முதல் முடிவு வரை நாங்கள் உங்களோடு இருப்போம், நடைமுறையின் ஒவ்வொரு படியிலும் உங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவோம்.

## நாங்கள் எவ்வாறு உதவுகிறோம் (தொடக்கம்)

தொடக்கம் முதலிருந்தே, உங்கள் பாதுகாப்புக் குழுவில் ஒரு முக்கிய உறுப்பினராக இருப்போம், சட்டம், காப்பீடு மற்றும் மருத்துவ நடைமுறையை நீங்கள் புரிந்துகொள்வதை உறுதிப்படுத்தி இந்த கடுமையான காலகட்டத்தில் உங்களுக்குத் தேவையான பராமரிப்பு மற்றும் ஆதரவை நீங்கள் பெறுவதை உறுதிசெய்வோம். பல ஆண்டுகளாக நாங்கள் ஒன்றிணைத்துள்ள உடல்நலப் பராமரிப்பு வழங்குநர்கள் மற்றும் நிபுணர்களின் தொடர்ச்சியான நெட்வொர்க்கானது, வழக்காடும் நடைமுறையையும் வழக்குத் தீர்வு சிகிச்சையை எவ்வாறு பாதிக்கலாம் என்பதையும் நன்கு புரிந்துகொண்டதாகும். எங்கள் நெட்வொர்க் எந்த காப்பீட்டு நிறுவனத்தாலும் ஆதரிக்கப்பட்டதில்லை, எனவே சிகிச்சை நடைமுறை முழுவதும் அவர்கள் உங்களது சிறந்தப் பராமரிப்பை சிந்தனையில் வைத்திருப்பவர்கள் என்பதில் நீங்கல் நம்பிக்கையாக இருக்கலாம்.

> “ஓட்லி விக்மாண்ட்டில் உள்ள எனது குழு தொழிற்திறமை வாய்ந்தது, அதோடு மிகவும் பாதுகாப்பாகவும் கருணை நிறைந்ததாகவும் இருந்தது. தனிநபர் காய வழக்கறிஞர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் நிலையில் இருக்க யாரும் விரும்புவதில்லை, ஆனால் அப்படி ஒரு தேவை ஏற்படும் போது, சிறந்தவர்களைப் பெற்றிருக்க வேண்டும்... அவர்களைப் போல கூட்டுமுயற்சி கொண்ட ஒரு குழுவை நான் இதுவரை பார்த்ததில்லை. என் பக்கத்தில் அவர்கள் இருந்ததை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்!”

**ரியான் மோரிசன்,**
முழு முதுகுத்தண்டும் காயமாகிப் பிழைத்தவர்

ரியானின் கதையைப் பற்றி ஆன்லைனில் *oatleyvigmond.com/testimonials* பக்கத்தில் அறிந்துகொள்ளலாம்.

# உங்களது உடனடி தேவைகள்

உடனடியாக பெருங்கேடுவிளைவிக்கும் காயமாக அணுகினால், பல தீர்மானங்களை எடுக்கும்படி முரண்படுத்தப்படுவீர்கள். சிக்கலான மற்றும் குழப்பமான காப்பீட்டு நடைமுறையைக் கடந்துசெல்ல உதவி உங்களுக்காக வாதாடுவதே எங்கள் பணியாகும். காப்பீட்டு காகிதப்பணி முதல் மருத்துவமனையில் இருந்து வீட்டுக்குச் செல்வதற்கு முன் வீட்டை மதிப்பீடு செய்ய ஏற்பாடு செய்வது வரை எல்லாவற்றுக்கும் பொறுப்பேற்று நடைமுறையை முடிந்தளவு எளிதாகவும் சுமூகமாகவும் மாற்றித்தருகிறோம். மருத்துவமனை முதல் வீடு வரை செய்யப்பட வேண்டிய பணிகளை சுமூகமாக நிறைவேற்றித் தர எங்களிடம் எல்லா வசதிகளும் உள்ளன என்பதை அறிந்து நீங்கள் நிம்மதியாக இருக்கலாம்.

## திறமையான விபத்துப் பயன்கள் நிபுணர்கள்

ஒட்டுமொத்த மறுசீரமைவுச் செயல்முறையிலும் எங்கள் திறமையான விப்பத்துப் பயன்கள் நிபுணர்கள் உங்கள் வழக்குரைஞர்களாக இருப்பார்கள், தீர்வோ தீர்ப்போ எட்டப்பட்ட பின்னும். அவர்கள் அனைவரும் காப்பீட்டு நிறுவனங்களில் இருந்து வந்து சேர்ந்திருக்கிறார்கள், காப்பீட்டு சரிசெய்தல்களில் அவர்களது அனுபவம் மதிப்புமிகுந்தது. காப்பீட்டுச் செயல்முறைப்பற்றிய அவர்களது அலாதியான அறிவாலும், காப்பீட்டு நிறுவனங்களுடன் கூட்டாகச் செயல்படுவதாலும், உங்களுக்குக் கிடைக்க வேண்டிய பயன்களை அனைத்தையும் நிச்சயமாகப் பெற்றுத்தருவார்கள்.

## எங்களது விபத்துப் பயன்கள் குழு உங்களுக்கு எவ்வாறு உதவுகின்றது:

### காப்பீட்டு நிறுவத் தொடர்பு

தேவையான காகிதப்பணியை நிறைவுசெய்து சமர்ப்பித்து உங்கள் காப்பீட்டு நிறுவனத்துடன் முதல்நிலை தொடர்பில் இருப்போம். உங்கள் காப்பீட்டாளருடன் தொடர்ச்சியான உறுதியான தகவல்பரிமாற்றத்தை ஏற்படுத்துவோம், அதன் மூலம் உரிமைக்கோரிக்கைகள் நடைமுறையில் நீங்கள் முன்னணியில் நின்று உங்களுக்குத் தேவையான மற்றும் கிடைக்க வேண்டிய பயன்களை எப்போதும் பெறுவீர்கள்.

### மருத்துவமனையில் இருந்து வெளியேறுவதற்கான திட்டமிடல்

மருத்துவமனையில் இருந்து நீங்கள் வெளியேறும் நடைமுறை எளிதாகவும் சுமூகமாகவும் இருப்பதை உறுதிப்படுத்துவதே எங்கள் பணியாகும். உடல்நலப் பராமரிப்பு சமூகத்திற்குள் எங்களுக்கு இருக்கும் வலிமையான உறவுகளால், சிறப்பான மற்றும் மிகவும் தகுதியான சமூக உடல்நலப் பராமரிப்புக் குழுவை நீங்கள் பெறுவதை உறுதிப்படுத்த மருத்துவமனைக் குழுவுடன் நாங்கள் பணியாற்றுவோம். நீங்கள் பெறவேண்டிய சிகிச்சையையும் உங்கள் தேவைகளையும் சமூக மறுசீரமைவுக் குழு உங்களுக்கு வழங்குவதை உறுதிசெய்வோம்.

### வருமான இழப்பு

இயலாமை ஏற்படுத்தும் காயம் உண்டானதும், உங்களது முதல் வருத்தம் உங்கள் கட்டணங்களை எவ்வாறு செலுத்துவீர்கள், உங்கள் குடும்பத்துக்கு எவ்வாறு உதவுவீர்கள் என்பது தான். உங்கள் காப்பீட்டாளரிடம் இருந்து இடைக்கால மாற்று வருமானம் கிடைப்பதற்கு துணை நிற்போம், அதே நேரம் உங்களுக்கு கேடு உண்டாக்கியவர் யார் மீதாவது உரிமைகோரிக்கை இருந்தால் எதிர்காலத்துக்கான வருமான இழப்பை மீட்டுத்தரவும் பணியாற்றுவோம். வருமான இழப்பு பயன்களை நீங்கள் முழுமையாகப் பெற, உங்கள் பணியாளரைத் தொடர்புகொள்ளுதல், மருத்துவ ஆதாரத்தைப் பெறுதல் மற்றும் உங்கள் பயன்கள் சமர்ப்பிக்கப்பட்டு பணம் கிடைக்க உதவும்படி உங்கள் காப்பீட்டாளரிடம் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து கொடுத்தல் போன்றவற்றைச் செய்துதருவோம். நீங்கள் குணமாவதற்கு நிதிசார்ந்த மன அமைதி அவசியம் என்பதை நம்புகிறோம்.

## நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான தேதிகள்

**7 நாட்கள்**

கயமடைந்த நபர் மோட்டார் வாகன விபத்தில் காயமடைந்திருந்தால் வாகனக் காப்பீட்டு நிறுவனத்துக்குத் தெரிவிக்க வேண்டும்.

**10 நாட்கள்**

நகராட்சி உடமை காரணமாக சறுக்கியிருந்தாலோ விழுந்திருந்தாலோ, அல்லது நகராட்சி/மாகாணத்தின் சாலைகள் நல்லமுறையில் பராமரிக்கப்படாததால் காயமடைந்ததற்காக உரிமைகோரிக்கை ஏற்படுத்த திட்டமிட்டிருந்தால், காயமடைந்த நபர் நகராட்சி அல்லது மாகாணத்துக்கு அறிவிப்பு அளிக்க வேண்டும்

**30 நாட்கள்**

காயமடைந்த நபர் தனது சொந்த வாகனக் காப்பீட்டு நிறுவனத்துடனான நிலையான விபத்துப் பயன்களுக்கான விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்ய வேண்டும்

**60 நாட்கள்**

மாகாண அரசாங்கத்துக்கு எதிராக வழக்குத் தொடுக்கும் முன் மாகாணத்துக்கு உரிமைகோரிக்கையின் அறிவிப்பை வழங்க வேண்டும்

**120 நாட்கள்**

காயத்துக்கான உரிமைகோரிக்கை மோட்டார் வாகன விபத்துடன் தொடர்புடையது என்றால் உரிமைகோரிக்கை அறிவிக்கப்பட வேண்டிய எதிர்தரப்பினர்களுக்கு அறிவிப்பு வழங்க வேண்டும்.

**1 ஆண்டு**

உடமை சேதார வாகன உரிமைக் கோரிக்கை மீது உங்கள் சொந்த காப்பீட்டு நிறுவனத்தின் மீது வழக்குத் தொடுப்பதற்கான காலக்கெடு.

**2 ஆண்டுகள்**

எதிர்தரப்புவாதிகளாக இருக்கக்கூடிய அனைவருக்கும் எதிராக காயமடைந்த நபர் வழக்குத் தொடர வேண்டிய நேரம்.

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

### எவ்வளவு செலவாகும்?

உங்களுக்குச் சிறந்த தீர்வு கிடைக்க அல்லது உங்கள் தேவைகளுக்கேற்ற தீர்ப்பு கிடைக்க நாங்கள் உறுதியாகப் பணிபுரியக் கடமைப்பட்டிருக்கிறோம். உங்கள் குழுவில் ஓட்லி விக்மாண்டைச் சேர்த்துக் கொள்வதால் தீர்ப்போ தீர்வோ கிடைக்கும் வரை உங்களுக்கு எந்தச் செலவும் ஏற்படாது.

### எனது வழக்கு எவ்வளவு காலம் நடைபெறும்?

ஒவ்வொரு வழக்கும் வித்தியாசமானது, ஆனால் சராசரியான தனிநபர் காய வழக்கின் முடிவை எட்டுவதற்கு 2-4 ஆண்டுகள் வரை ஆகலாம். காயங்கள் இயல்புநிலைக்குத் திரும்புவதற்கு நேரம் எடுத்துக் கொள்ள வேண்டியது முக்கியமானதாகும், அதன் மூலம் உங்கள் உரிமைக்கோரிக்கைகளுக்கு உதவுவதற்கு முன் உங்கள் காயங்களால் ஏற்படும் இயலாமைகள் எவ்வளவு பாதிக்கின்றன என்பதை நாங்கள் புரிந்துகொள்ள முடியும்.

### எனது வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்குச் செல்லுமா அல்லது வெளியே தீர்க்கப்படுமா?

விசாரணை அவசியமாகி வெற்றிகரமாக முயன்ற வழக்குகளின் வரலாறு எங்களிடம் உள்ளது. எனினும், முடிந்தளவு விசாரணை இல்லாமலே ஒவ்வொரு வழக்கையும் தீர்வுக்குக் கொண்டுவருவதே எங்கள் நோக்கம். வழக்கின் முடிவை குழப்பாமல் முடிந்தளவு விரைவாக எங்கள் வாடிக்கையாளரின் வழக்குகளைத் தீர்வுக்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறோம். உங்களுக்கு எது சரியாக வருமோ அதுவே எங்கள் நடவடிக்கைச் செயல்பாட்டை இயக்குவதாக இருக்கும்.

பிற அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கான பதில்களை ஆன்லைனில் *oatleyvigmond.com/frequently-asked-questions* பக்கத்தில் காணவும்.

""நான் மருத்துவமனையில் இருந்தபோது நான் எந்த சட்ட நிறுவனத்திடம் செல்ல வேண்டும் என்று என் பெற்றோர் தீர்மானித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஓட்லி விக்மாண்டைத் தேர்வுசெய்ததற்கு இறைவனுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் எங்களைப் பார்த்துக் கொண்டார்கள். ரோஜர் ஓட்லியும் அவரது குழுவும் மிகவும் தொழில்திறமையோடு எங்களை எப்போதும் கவனமாக விசாரித்துக் கொண்டிருந்தார்கள். குடும்பத்தின் சிறிய அங்கமாகவே மாறிவிட்டார்கள். இவர்களை விடச் சிறப்பானவர்களை நாங்கள் தேர்வுசெய்திருக்க முடியாது என்று நினைக்கிறேன்."

**ஷானான் டியரிங்,**
முழு முதுகுத்தண்டும் காயமாகிப் பிழைத்தவர்

ஷானானின் கதையைப் பற்றி ஆன்லைனில் *oatleyvigmond.com/testimonials* பக்கத்தில் அறிந்துகொள்ளலாம்.





“"எங்கள் மகன் காயமடைந்த பின் யாரும் அளிக்க முடியாத சிறந்த உதவியைப் பெற்றோம். ஒட்லி விக்மாண்டை நாங்கள் முதலில் தொடர்புகொண்ட போது மிகுந்த அழுத்தத்துடன் கவலையுடனும் இருந்தோம். எனது குடும்பத்தில் உள்ள அனைவரும் உதவியடையும்படி சரியான மருத்துவர்கள், சிகிச்சையாளர்கள், உதவிப் பணியாளர்கள் மற்றும் வழக்கு மேலாளரைப் பெற எனது குழுவினர் உதவினார்கள். உலகத்தின் பாரத்தை என் தோள்களின் மீதிருந்து விலக்கினார்கள். எங்கள் மகனின் எதிர்காலத்துக்குக் கிடைத்த தீர்வால் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம்.”

வெர்னா போர்ட்டர், ஜேம்ஸ் போர்ட்டரின் தாயார்,
**மூளைக் காயத்தில் இருந்து பிழைத்தவர்**

எங்கள் வாடிக்கையாளரின் வெற்றிக் கதைகளைப் பற்றி *oatleyvigmond.com/testimonials* பக்கத்தில் ஆன்லைனில் அறிந்துகொள்ளவும்.

## உங்களுக்கு எந்த வழக்கறிஞர் வாதாட வேண்டும் என்பதை நீங்கள் முடிவு செய்வது தான் நீங்கள் எடுக்கும் மிக முக்கியமான தேர்வுகளில் ஒன்றாக இருக்கும் என்பதை ஓட்லி விக்மாண்டில் நன்றாக அறிவோம்.

உங்கள் நிதி ஆதாரத்தை அது சார்ந்திருப்பது முக்கியமான விஷயமாகும். போதுமான இழப்பீடு இல்லாமல், உங்களையும் உங்கள் குடும்பத்தையும் நீங்கள் எவ்வாறு கவனிப்பீர்கள், உங்கள் வாழ்க்கையின் மீதமுள்ள காலத்தில் உங்களுக்குத் தேவையான சேவைகளுக்கு நீங்கள் எவ்வாறு பணம் செலுத்துவீர்கள்? ஓட்லி விக்மாண்டில் உள்ள ஒவ்வொரு வழக்கறிஞரும் பணியாளரும் உங்கள் நிதிசார்ந்த பாதுகாப்பைத் திரும்பப்பெறுவதற்கு பொறுப்பேற்கிறார்கள். நீங்கள் சிறப்பாக மீண்டுவருவரும்படி உங்கள் சமூக மறுசீரமைவுக் குழுவினரை உருவாக்குவதற்கு உதவுவதற்கும் தேவையான பொறுப்புடைமையையும் நாங்கள் ஏற்கிறோம்.

உங்கள் உடல்நலத்தை நீங்கள் மீண்டும் பெற்று அதிகபட்ச குணமாகிய நிலையை அடைந்த பின் பொருளாதார ரீதியில் இயங்கும் களத்தை அடைவதற்கு உதவுவதே எங்கள் பொறுப்பாகும். அது எங்களுடைய தலையாய கடமையாகும், ஆனால் நாங்கள் பணியாற்றும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் அதைச் செய்ய உறுதி கொண்டிருக்கிறோம்.

**ரோஜர் ஓட்லி & ஜிம் விக்மாண்ட்**
நிறுவனக் கூட்டாளர்கள்

# நீங்கள் தான் எங்களுக்கு முதலானவர்.

ஓட்லி விக்மாண்டில் எங்கள் வாடிக்கையாளர்கள் உடனான உறவு தீர்விலோ விசாரணையிலோ முடிந்துவிடுவதில்லை. சிறந்த சட்ட பிரதிநிதித்துவம் வழங்குவது மட்டும் எங்களது பணி அல்ல, ஆனால் நீண்ட-கால பாதுகாப்பை அமைத்துத் தருவதும் எங்கள் பணி என்பதை நம்புகிறோம். எங்கள் வாடிக்கையாளர்களின் வழக்குகளை நியாயமாக முடித்துக் கொடுப்பதற்கான சிறந்த வழிகளைத் தொடர்ந்து தேடி அதன் மூலம் சிறந்த பலன்களை அடைவதை, தினமும் செயல்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

1-888-662-2481
www.oatleyvigmond.com

Oatley Vigmond
ONTARIO’S PERSONAL INJURY LAW FIRM